**ஒதுக்கீட்டுத் தலைப்பு 271 - மாவட்டச் செயலகம், திருகோணமலை**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

---

**1. மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்**

(i) மாவட்டத்தில் அரசாங்கத்தின் பிரதான முகவராகச் செயற்படுதல்

(ii) திருகோணமலை மாவட்டத்தினதும் பிரதேசத்தினதும் அரசாங்க நிருவாக நோக்கத்திற்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.

(iii) ஏனைய வரிசை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்

(iv) ஏனைய வரிசை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்படுகின்ற நிதி மற்றும் ஏனைய வளங்களை முகாமைத்துவம் செய்தல்.

(v) மாவட்டத்தில் இடர் நிவாரண சேவைகள் மற்றும் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நிர்வகித்தல்.

(vi) திருகோணமலை மாவட்டத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை ஒருங்கிணைத்தல்

(vii) தேசிய மற்றும் பிரதேச ரீதியில் முக்கியத்துவமிக்க விழாக்கள் மற்றும் நிகழ்வுகளை மாவட்டத்தில் நடாத்துதல்.

(viii) வருமானங்களைச் சேகரித்தல், உத்தரவுப் பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வினியோகித்தல் மற்றும் புதுப்பித்தல் போன்றவைகளை ஒருங்கிணைத்தல்

(ix) மாவட்டத்தில் தேர்தல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

(x) பதவியணியினர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் தொழிற்பயிற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடுசெய்து அமுல்படுத்துதல்.

## 2. மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) பட்டிணமும் சூழலும்

(ஆ) பதவி சிறீபுர

(இ) கோமரங்கடவல

(ஈ) கிண்ணியா

(உ) சேருவில

(ஊ) மூதுார்

(எ) கந்தளாய்

(ஏ) குச்சவெளி

(ஐ) மொரவெவ

(ஒ) தம்பலகாமம்

(ஓ) வெருகல்

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 05 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (உ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 1.6 முதல் 1.13 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களை தவிர்த்து திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) ஏடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| வாகனப் பதிவேடு | நி.பி. 1647(உ) |
| சம்பவக் குறிப்புப் புத்தகம் | நி.பி. 1645(அ), (ஆ) மற்றும் (இ) |
| இழப்புப் பதிவேடு | நி.பி. 110 |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| கணனி மற்றும் உப பாகங்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 365,086,685 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் இதில் ரூபா 329,110,050 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 35,976,365 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 214,150,000 | 253,086,685 | 6,726,608 | 03 |
| மூலதனம் | 87,000,000 | 112,000,000 | 29,250,027 | 26 |
| மொத்தம் | 301,150,000 | 365,086,685 | 35,976,635 | 10 |

**(ii) பாதீட்டு முரண்**

06 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 24 திணைக்களங்களினால் மாவட்ட செயலகத்திற்கு ரூபா 648,712,904 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 569,446,959 தொகை அதாவது 87 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க சேமிப்பு ரூபா 79,265,945 தொகை அதாவது 13 சதவீதமாக இருந்தது.

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 2,123,000 தொகையான நிதியேற்பாட்டினை ரூபா 864,888 இனால் விஞ்சி ரூபா 2,987,888 தொகை செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 529,738,950 தொகையான நிதியேற்பாடு

வழங்கப்பட்டிருந்த போதிலும் மாவட்ட செயலகத்தினால் ரூபா 457,873,507 தொகை மாத்திரம் அதாவது 87 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 71,865,443 தொகை அதாவது 13 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 271-1-1-2102 ஆம் செலவின விடயத்தின் கீழ் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நி.பி. 66 இன் மாற்றல்கள் ரூபா 43,000 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு அச் செலவின விடயங்களில் ரூபா 1,000,426 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

(v) 271-1-1-2502 ஆம் இலக்க செலவின விடயத்திற்காக 2012 ஒக்தோபர் 31 ஆந் திகதி ரூபா 25,000,000 தொகையான குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 15,684,517 தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது. சேமிக்கப்பட்ட தொகை குறைநிரப்பு மதிப்பீட்டில் 63 சதவீதமாகும்.

(vi) 271-1-1-1003 ஆம் இலக்க செலவின விடயத்திற்காக நிபி. 66 இன் மூலம் ரூபா 600,000 தொகையும், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 37,936,685 தொகையுமாக ரூபா 38,536,685 தொகையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது ஆரம்ப மதிப்பீட்டு ஏற்பாட்டில் 771 சதவீதமாகும்.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

27101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 22,000,000 | 19,931,555 | 14,000,000 | 23,534,638 | 110,000,000 | 70,930,765 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 27101 ஆம் இலக்க செலவின விடயத்தின் அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,154,017 ஆக இருந்ததுடன், அந்த நிலுவையான மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க பாதீட்டு சுற்றுநிரூபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக பதவிஸ்ரீபுர பிரதேச செயலகத்தினால் ரூபா 250,000 இனை விஞ்சி இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது.

## (ஈ) கட்டுநிதிக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 76,558,739 தொகையான மீதி காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 நவம்பர் 20 ஆந் திகதிய 05/2012 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கட்டு நிதி மீதி திறைசேரியின் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்குத் தீர்த்து வைக்கப்படவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக பதவிநிலையற்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 02 சந்தர்ப்பங்களில்

ரூபா 20,000 படி ரூபா 40,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது.

**(உ) பொதுவைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கு மீதிகள் ரூபா 108,886,902 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

(i) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 16,481,925 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட தொகையில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,748,540 தொகையானது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 1.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 ஆம் ஆண்டு மற்றும் அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 10 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

### 1.6.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.5 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீ.எம்.ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- பூர்வீக / ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கை
- காலாண்டு அறிக்கை

### 1.6.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்துதல்

2009 யூன் 09 ஆந் திகதிய டீ.எம்.ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றுநிரூபத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது.

### 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்கள் வகை | அலகுகளின் எண்ணிகை | ஆண்டு | தொடர்புடைய செயலகம் |
|---|---|---|---|---|
| (i) | வாகனங்கள் | 03 | 1985 இலிருந்து | மாவட்ட செயலகம் |
| | தண்ணீர் பவுசர் | 01 | 2012 நவம்பர் 19 தொடக்கம் | மாவட்ட செயலகம் |
| (ii) | இயந்திராதிகள் (நிழற்பட பிரதி இயந்திரம்) | 01 | 2011 இலிருந்து | பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகம் |
| (iii) | கணனி மற்றும் உப பாகங்கள் | 19 | 2011 இலிருந்து | பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகம் |
| | | 19 | 2011 இலிருந்து | வெருகல் பிரதேச செயலகம் |
| (iv) | மின்பிறப்பாக்கி இயந்திரம் | 06 | 2005 இலிருந்து | கந்தளாய் பிரதேச செயலகம் |
| (v) | ஏனைய சொத்துக்கள் | 3109 | 2011 இலிருந்து | பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகம் |
| | | 193 | 2011 இலிருந்து | வெருகல் பிரதேச செயலகம் |

## 1.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (i) | **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | **மாவட்ட செயலகம்** |
| | 2008 சனவரி 01 ஆந் திகதிய 1350/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 261,483 கூட்டுத்தொகையான 3 கொடுப்பனவுகளுக்குரிய முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ii)** | **நிதிப் பிரமாணம்** | **மாவட்ட செயலகம்** |
| | நி.பி 104 (2),(3),(4) | - நட்ட இழப்பு தொடர்பான ஆரம்ப அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 05 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.<br>- நட்ட இழப்பு ஏற்பட்ட திகதி தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பூரண அறிக்கை 22 மாதங்கள் கடந்திருந்த போதிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | நி.பி 753(1) | - அனர்த்த பொருட்களை விநியோகிக்கும் போது பொது 141 படிவத்தில் விநியோகித்தல் கட்டளை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| நி.பி 1646 | - வாகனப் பயன்பாடு தொடர்பாக மாதாந்த பொழிப்பு மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவனை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 1643 | பிரயாணத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் மைலோ மீற்றரை பரீட்சித்து சாரதியினால் எழுதப்பட்ட நாளாந்த ஓட்ட அட்டவணை வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

**கிண்ணியா பிரதேச செயலகம்**

| | |
|---|---|
| நி.பி 371 (2) (இ) | 05 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 240,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி 04 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

**கந்தளாய் பிரதேச செயலகம்**

| | |
|---|---|
| நி.பி 715(2)(ஆ), 751, 753(2),755 | பொருட்களை இலகுவாக கண்டறியக் கூடிய வகையில் களஞ்சியப் பொருட்கள் ஒழுங்கு முறையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | - களஞ்சியத்திற்கு கிடைக்கின்ற பொருட்கள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| | - பொருட்களைக் கையேற்கும் உத்தியோகத்தரினால் பொருள் பெறுவனவுக் கட்டளைகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| | - களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் செல்கையில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்ட அமுல்படுத்தல் பலவீனங்கள்

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் மற்றும் செயற்திட்டங்களை நிறைவேற்றுதலிலுள்ள பலவீனங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| | செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | 2012 திெசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | |
| (I) | கந்தளாய் பிரதேச செயலகம் | | | | | |
| | ஜயந்தி முன்பள்ளிப் பாடசாலை நிர்மாணம் | 1,000,000 | 2012/04/25 | 2012/12/31 | 347,527 | அதிக மழை காணப்பட்டமை |
| | பன்சல கொடெல்ல அரச மரத்தடி சந்தி தொடக்கம் கமநல சேவைகள் நிலையம் வரை கொங்கிரீட் இடுதல் | 1,000,000 | 2012/06/25 | 2012/12/31 | 122,364 | அதிக மழை காணப்பட்டமை |
| (II) | பதவிசிறிபுர | | | | | |
| | நெல் களஞ்சியத் திருத்தம் (140’ x 40’) | 5,100,000 | 2012/08/13 | 2012/12/13 | 2,336,112 | அதிக மழை காணப்பட்டமை |
| (III) | மொரவெவ | | | | | |
| | நெல் களஞ்சியத் திருத்தம் மொரவெவ தெற்கு (60’ x 30’) | 4,000,000 | 2012/07/09 | 2012/11/09 | 2,714,937 | அதிக மழை காணப்பட்டமை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | நெல் களஞ்சியத் திருத்தம் மஹதிவுல்வெவ (60' x 30') | 4,000,000 | 2012/07/09 | 2012/11/09 | 1,451,917 | அதிக மழை காணப்பட்டமை |
| | பசளைக் களஞ்சிய கட்டிட நிர்மாணம் | 1,000,000 | 2012/05/02 | 2012/11/02 | 421,116 | அதிக மழை காணப்பட்டமை |
| (IV) | தம்பலகாமம் | | | | | |
| | மூன்று நெல் களஞ்சியங்கள் திருத்தம் (70' x 30') | 20,000,000 | 2012/07/13 | 2012/11/13 | 7,493,745 | அதிக மழை காணப்பட்டமை |
| (V) | கிண்ணியா | | | | | |
| | நெல் களஞ்சியத் திருத்தம் மணியரசங்குளம் (20' x 30') | 7,000,000 | 2012/07/16 | 2012/11/16 | 3,036,269 | அதிக மழை காணப்பட்டமை |
| (VI) | சேருவில | | | | | |
| | காவன்திஸ்ஸபுர முன்பள்ளிப் பாடசாலைக் கட்டிட நிர்மாணம் | 1,000,000 | 2012/05/16 | 2012/11/16 | 663,849 | சமர்ப்பிக்கப்பட வில்லை |
| | தெஹிவத்த பல்நோக்குக் கட்டிட (Multi Purpose) நிர்மாணம் | 1,000,000 | 2012/04/23 | 2012/10/23 | 486,242 | சமர்ப்பிக்கப்பட வில்லை |
| | சோமாவதி வீதியில் அந்துள்ள மீகஸ்வெவ புனர்நிர்மாணம் | 1,000,000 | 2012/06/19 | 2012/12/19 | 736,728 | சமர்ப்பிக்கப்பட வில்லை |

**(ஆ) கமநெகும செயற்திட்ட நிர்மாணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(I) கிண்ணியா பிரதேச செயலகம்**

பின்வரும் நிர்மாணங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பாக தொழில் நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | உள்ளபடியான கிரயம் | அவதானிக்கப்பட்ட குறைபாடு |
|---|---|---|
| பல்ஹா பள்ளி வீதி நிர்மாணம் | 953,915 | மண் உரிய முறையில் பரவப்படாமையின் காரணமாக வீதியின் பல இடங்கள் கீழிறங்கியிருந்தது. |
| மத்திய பள்ளி வீதியை கொங்கிரீட் இட்டு நிர்மாணித்தல் | 876,337 | கொங்கீரிட் வீதியின் பல இடங்கள் வெடித்துக் காணப்படாமை |
| பிலால் பள்ளி வீதியை கொங்கிரீட் இட்டு நிர்மாணித்தல் | 908,587 | கொங்கீரிட் வீதியின் பல இடங்கள் வெடித்துக் காணப்பட்டமை |
| பனிச்சன்குளம் வீதியை கொங்கிரீட் இட்டு நிர்மாணித்தல் | 952,607 | கொங்கிரீட் வீதியின் இருபக்கமும் மண்போடப்பட்டு செப்பனிடப்பட்டமை |

| | | |
|---|---|---|
| புதுக்குடியிருப்பு வீதிக்கு கொங்கீரிட் துண்டு கல் இடுதல். | 973,382 | வீதியின் இருபக்கத்திலும் அங்கீகரிக்கப்பட்ட மண் இடப்பட்டு தயாரிக்கப்படா திருந்ததுடன் வீதியின் அரைப்பகுதி ஏறத்தாழ முழுமையாகக் கீழிறங்கியிருந்தமை. |

**(II) கந்தளாய் பிரதேச செயலகம்**

பின்வரும் நிர்மாணங்கள் தொடர்பாக தொழில் நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**i. லீலாரத்தன விளையாட்டரங்கு தொடக்கம் பராக்கிரம மாவத்தை வரைக்குமான வீதிக்கு கொங்கீரிட் இடுதல் (ரூபா 852,319)**

கொங்கீரீட் வீதியின் 04 இடங்களில் வெடிப்புக்கள் காணப்பட்டதுடன் மேலும் சில இடங்களில் கற்கள் வெளிப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட கொங்கீரிட் கலவை உரிய நியமங்களில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**ii. சீவலி வித்தியாயத்தை அபிவிருத்தி செய்தல் (ரூபா 490,436)**

சீவலி வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 490,436 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்காகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு விடய இல 2 இன் கீழ் கணனிக் கூடத்தின் பிரதான கதவிற்கு செப்பினாலான பிணைச்சல்கள் மற்றும் உப பாகங்கள் பொருத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும் அதற்காக இரும்பினாலான பிணைச்சல்கள் மற்றும் உப பாகங்கள் பொருத்தப்பட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 27,440 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே விடய இல 7 இன் கீழ் பாடசாலைப் பெயர்ப் பலகையைப் பொருத்துவதற்காக ரூபா

22,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் உரிய பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் விடய இலக்கம் 5 இன் கீழ் பாடசாலையைச் சுற்றி 550 அடி வேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 137,500 தொகை மதிப்பீட்டின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒரே வளவில் அமைந்துள்ள பாடசாலைக் கட்டிடம் மற்றும் விளையாட்டரங்கு என்பவற்றை பிரிக்கும் வகையில் குறித்த வேலி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதனால் விளையாட்டரங்கு பாதுகாப்பற்றிருந்தது.

**(III) ஐயந்திபுர உதாகிரி முன்பள்ளிப் பாடசாலை நிர்மாணம் (ரூபா 980,393)**

மதிப்பீட்டு விடய இல 09 இன் கீழ் கதவு, யன்னல் பொருத்துவதற்காக ரூபா 45,207 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- மதிப்பீட்டின் பிரகாரம் முதலாம் வகுப்பு மரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், களப் பரிசோதனையின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட மர வகையின் தரம் தொடர்பாக திருப்திப்பட முடியவில்லை.

- கதவு நிலையின் உயரம் 7 அடியாக இருக்க வேண்டிய போதிலும் பொருத்தப்பட்டிருந்த 3 கதவு நிலைகளில் பெற்று 5 அடி 10 அங்குல உயரமாகவும் மற்றைய இரண்டினதும் உயரம் அதனை விடக் குறைவாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

- செப்புக் கதவு பிணைச்சல்கள் மற்றும் உப பாகங்கள் பொருத்தப்பட வேண்டிய போதிலும் இரும்பினாலான பிணைச்சல்கள் மற்றும் உப பாகங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

## 1.10 சீராக்கப்பட வேண்டிய மீதி

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் அதற்குரிய 11 பிரதேச செயலகங்களினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கினக்க கூற்றில் காண்பிக்கப்படுகின்ற சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சீராக்கங்கள் தொடர்பான விபரம் | காலப் பகுப்பாய்வு<br>06 மாதத்திற்கு மேல் 01 வருடத்திற்கு குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 இற்குக் குறைவு | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 116,672 | 284,290 | 400,962 |

## 1.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறைகளிலிருந்து விலகுதல்

பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

கந்தளாய் பிரதேச செயலகத்தினால் கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிணைகள் பெற்றுக் கொள்ளப்படாமல் 24 நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 3,920,000 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

## 1.12 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமுர்த்தி வங்கி கடன் தவணைப் பணத்தை அறவிடுதல் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் நிலுவை கடன் தவைணப் பணத்தை அறவீடு செய்வதற்கு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட கடன் தொகையிலிருந்து 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அவ்வாறு அறவிடவேண்டியிருந்த நிலுவைத் தவணைப் பணம் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **பிரதேச செயலகம்** | **2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவைத் தவணைப் பணம்** |
|---|---|
| | **ரூபா** |
| பட்டிணமும் சூழலும் | 2,610,293 |
| வெருகல் | 2,813,350 |

(ஆ) பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவிற்கு 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த 162 காணி உரித்துறுதிகள் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் பதிவு செய்யப்பட்ட 38 காணி உரித்துறுதிகள் உரிமையாளருக்கு வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) வெருகல் பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவினால் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட 96 காணி உரித்துறுதிகள் உரிமையாளருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்ட விலை தீர்மானிக்கும் குழுவினால் 106 நானாவித விடயங்களுக்காக 2012 ஆம் ஆண்டில் கூறு விலைகள் தீர்மானிக்கப்பட்டிருந்தன. அந்தக் கூறுவிலைகளின் அடிப்படையில் ஒவ்வொரு நிர்மாண மதிப்பீட்டு விடயத்திற்காகவும் விலைப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக பிரதேச செயலகங்களினால் மதிப்பீட்டினைத் தயாரிக்கையில் யதார்த்தமற்றிருந்ததுடன் ஒரே செயற்பாட்டிற்காக பல்வேறு கூறுவிலைகள் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **மதிப்பிடப்பட்ட வேலை விபரம்** | **பயன்படுத்தப்பட்டிருந்த விலை** | |
|---|---|---|---|
| | | **ரூபா வெருகல் பிரதேச செயலகம்** | **ரூபா பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகம்** |
| (i) | காணப்படுகின்ற வீதியின் ஆரம்ப அமைப்பு நிலைகளை வெட்டுதல், சமப்படுத்துதல் மற்றும் நிலத்திடப்படுத்தல் (Trimming & leveling campering and compaction of original ground to 100 % compaction within the existing road way) | 52 | 67 |
| (ii) | வீதியினை அமைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டவாறு மண் (சீபீஆர் 20 இற்கு மேல்) வெட்டப்பட்டு தோண்டப்படல், போக்குவரத்துக் கட்டணம் மற்றும் நிலத்திடப்படுத்தல் அடங்கலாக (Excavation supply and pilling approved quality soil (CBR >20) for bas construction of carriage way including transport and compaction.) | 1,280 | 1,880 |
| (iii) | 150 x 225 மில்லிமீற்றர் அளவிலான வீதிக் கட்டுக்களுக்கு கொங்கிரீட் இடுதல் 1:2:4 (19 மில்லி மீற்றர்)(தோண்டுதல் மற்றும் சட்டரின் வேலைகள் அடங்கலாக) (150 × 225 mm) kerb wall in 1:2:4 (19mm) concrete (Rate inclusive of excavation formwork) | 500 | 543 |

| | | | |
|---|---|---|---|
| (iv) | வீதியின் மேற்பரப்பைத் தயாரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட மண் (சீபீஆர் 20 இற்கு மேல்) வெட்டப்பட்டு தோண்டப்படல், போக்குவரத்துக் கட்டணம் மற்றும் நிலத்திடப்படுத்தல் அடங்கலாக (Excavation supply and pilling approved quality soil (CBR > 20) for shoulder including transport and compaction.) | 1,280 | 1,935 |

(உ) 2012 திசெம்பர் மாதம் ஏற்பட்ட அதிக மழை மற்றும் வெள்ளப் பெருக்கு போன்ற காரணங்களினால் திருகோணமலை மாவட்டத்தில் இடர்களுக்கு உள்ளாகிய மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக 2012 திசெம்பர் 28 ஆந் திகதி தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் நிலையத்தினால் பொருள் நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது. அப்பொருள் நிவாரணங்கள் பிரதேச செயலகங்களினால் மூலம் 2013 யூலை மாதம் வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

| பொருள் வகை | அளவு |
|---|---|
| குட்டில் விரிப்புக்கள்(துவாய், போர்வைகள்) | 550 |
| பாய்கள் | 500 |
| பிளாஸ்டிக் பீங்கான்கள் | 750 |
| கம்பூட் | 25 |
| நீரைச் சுத்திகரிக்கும் மாத்திரைகள் | 4000 |

(ஊ) கீழே காட்டப்பட்டவாறு பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்ட காசோலைகள் உரிய தரப்பினர்களுக்கு வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **பிரதேச செயலகம்** | **காசோலைகளின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காலப்பகுதி** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| குச்சவெளி | 26 | 447,182 | 06 மாதம் முதல் 15 மாதம் வரை |
| கிண்ணியா | 09 | 135,987 | 01 மாதம் முதல் 07 மாதம் வரை |

## 1.13 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தினதும் 11 பிரதேச செயலகங்களினதும் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை** | **உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 39 | 26 | 13 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 35 | 13 | 22 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 725 | 378 | 347 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 145 | 112 | 33 | - |
| (v) | ஏனையோர் (அமையம்/தற்காலிகம்/ஒப்பந்த அடிப்படை) | - | 07 | - | 07 |
| | மொத்தம் | 944 | 536 | 415 | 07 |